தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, ஏப்ரல் 18, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்."

ஒருவர் தம் உள்ளத்திற்கு உண்மை அல்லாதது எனத் தெளிவாகத் தெரிந்ததைப் பேசாமல் நடப்பாரேயானால், அப்படிப்பட்டவர் உலகத்தார் எல்லோருடைய உள்ளங்களிலும் இடம்பெற்று இருப்பார்.

1. இரங்கல் தீர்மானம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன் வைக்கிறேன் :

"தலைசிறந்த தமிழ் அறிஞர்களில் ஒருவரும் அளப்பற்ற ஆன்மீகப்பற்று கொண்டவரும், சமய-சமுதாய தமிழ் வளர்ச்சிப் பணிகளில் பெரும்பங்கு கொண்டு தன் வாழ்நாள் முழுமையும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவருமான தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 15-4-1995 அன்று இரவு மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை மிகவும் துயரம் கொள்கிறது.

[*1995 ஏப்ரல் 18*

தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆன்மீக நெறியில் பற்றுக் கொண்டதோடன்றி தமிழ் மீது தணியாப் பேரார்வமும், புலமையும், பேராற்றலும் கொண்டவராகத் திகழ்ந்து வந்தார். சமயத்துறை மட்டுமன்றி, கல்வி, கூட்டுறவு, தொழில் வளர்ச்சி, பண்பாடு, சமயம் ஆகிய துறைகளிலும் அவர் சீரிய பல பணிகளை ஆற்றியுள்ளார். தமிழ்நாடு அருள்நெறித் திருப்பணி மன்றம், தமிழ்நாடு அருள் நெறித் திருக்கூட்டம், தமிழ்நாடு தெய்வீகப் பேரவை மற்றும் திருப்பத்தூர் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், அனைத்திந்திய அமைதிக் குழுவின் தலைமைக் குழு உறுப்பினராகவும், திருவண்ணாமலை ஆதீனத்தின் ஆதீனகர்த்தராகவும், அஞ்சுகோயில் தேவஸ்தானத்தின் பரம்பரை அறங்காவலராகவும், அரும்பணிகள் பல ஆற்றியுள்ளார். தமிழ் மொழியில் சமய, இலக்கிய நூல்கள் பலவற்றைப் படைத்ததோடன்றி, தமிழகம் என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கிய பெருமை மிக்கவராவார். அவரால் நடத்தப்பட்டு வந்த பல்வேறு கல்வி நிலையங்கள் மற்றும் ஆதரவற்றோருக்கான விடுதிகள் ஆகியன அவர் ஆற்றிய சமுதாயப் பணிகளுக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். மேலும் அவர் 1969-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

இத்தகைய சிறப்புகளுக்கு உரியவரான தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுடைய மறைவு குறித்து இப்பேரவை மிகவும் வருந்துவதோடு, அப்பெரியவரைப் பிரிந்து வருந்தும், அவர்தம் திருமடத்தைச் சார்ந்தோர்க்கும் அவர்மீது பற்றுடைய தமிழன்பர்களுக்கும் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் எழுந்து இரண்டு நிமிடங்கள் மௌனமாக நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித் துளிகள் மௌனமாக நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேறியது)